# வெற்றிடம்

## GSMB TECHNICAL SERVICES (PVT) LTD

(சுற்றாடல் அமைச்சின் கீழுள்ள புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் அரசுக்குச் சொந்தமான துணை நிறுவனம்)

## பின்வரும் பதவி வெற்றிடத்திற்காக தகுதி மற்றும் அனுபவம் உடைய அபேட்சகர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### மனித வள மற்றும் நிர்வாக முகாமையாளர் (MM 1-1 – தரம் II) பதவி 01

**தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்**

***வெளிவாரி அபேட்சகர்கள்***

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட மனித வளங்கள்/ முகாமைத்துவம்/ பொது நிர்வாகம்/ வர்த்தகத் துறையில் இளமாணி பட்டம்

**மற்றும்**

முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் மனித வளங்கள்/ நிர்வாகம்/ முகாமைத்துவ துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

***உள்ளக அபேட்சகர்கள் (கீழுள்ள 01 அல்லது 02)***

(1) மேல் குறிப்பிடப்பட்டவாறு வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்

**அல்லது**

(2) மனித வளங்கள்/ நிர்வாகத் துறையில் 'கனிஷ்ட முகாமையாளர்' (JM 1-1) பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பளம்**

அடிப்படைச் சம்பளம் - ரூபா 71,730 (2025 இல்) மற்றும் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

**மேலதிக நன்மைகள்:**

- EPF மற்றும் ETF நிதிய பங்களிப்பு
- வருடாந்த இலாபத்தில் ஊக்கக் கொடுப்பனவுகள்
- ஊழியர் மற்றும் தங்கியிருப்பவர்களுக்கான விரிவான மருத்துவ காப்புறுதித் திட்டம்.
- போக்குவரத்து கொடுப்பனவுகள்
- நிறுவன நலன்புரி நன்மைகள், முதலியவற்றுக்கான தகைமை

- **வயது வரம்பு**

(விண்ணப்ப இறுதித்திகதி அல்லது அதற்கு முன்) 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

ஆர்வமுடைய அபேட்சகர்கள் தமது கல்வி, தொழில்முறை மற்றும் மற்ற தொடர்புடைய சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகள் மற்றும் இரு உறவினர் அல்லாத நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் சேர்த்து தமது விண்ணப்பங்களை 2025.10.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

அரச கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகளின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

தேவையான தகைமைகள் மற்றும் அனுபவத்தை நிரூபிப்பதற்கான உறுதி செய்யப்பட்ட நிழல் பிரதிகள் இல்லாத மற்றும் தாமதிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவர்.

**தலைவர்**
**GSMB TECHNICAL SERVICES (PVT) LTD,**
**இல. 569, எபிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**